DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No: CC.No.60/2017**

**prosecution witness: PW-3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused absent**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணபிரான் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

20.12.2024

குறுக்கு விசாரணை:-

நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த தேதியில் எந்த இடத்திலிருந்து எத்தனை மணிக்கு ரோந்து சென்றோம் என்றால் மண்டபம் வனசரக அலுவலகத்திலிருந்து காலை 04.00 மணிக்கு சென்றோம். நான் மட்டும்தான் சென்றேனா என்றால் நான், வடமலையான், வெங்கடேசன், மலைராஜ் சென்றோம். எதில் போனாம் என்றால் நானும், வடமலையானும் எனது இருசக்கரவாகனத்திலும், மற்றவர்கள் வேறு இருசக்கர வாகனத்திலும் சென்றோம். எந்த எந்த பகுதிகளுக்கு சென்றோம் என்றால் தெற்கு மண்டபம் கடற்கரைக்கு சென்றுவிட்டு கடற்கரை முழுவதும் சுற்றிவிட்டு சம்பவ இடத்திற்கு வந்தோம். மண்டபம் முனைக்காடு சூட்டிங் திடலுக்கு சென்றோம். அது தெற்கு கடற்கரை ஓரமாக உள்ளது. எங்கள் அலுவலகத்தில் வனசரக அலுவலர் யார் என்றால் கணேசலிங்கம். சம்பவ நேரத்தில் மண்டபத்தில் இருந்தாரா என்றால் இராமநாதபுரத்தில் இருந்தார் சம்பவம் நடந்தவுடன் இராமநாதபுரத்திலிருந்து மண்டபம் வனசரக அலுவலகத்திற்கு வரசொன்னோம். சம்பவ இடத்திலிருந்து நேரடியாக மண்டபம் வனசரக அலுவலகத்திற்கு வந்தோம். அங்கே வனசரகர் இருந்தார். பொதுவாக ஒரு வழக்கில் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டால் அத்தாட்சி, மகசர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சி, மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். மண்டபம் வனசரக அலுவலகத்தில் வைத்து வழக்கு சொத்துக்களை ஒப்படைத்தோம் என்றால் சரிதான். அங்கு வைத்து அத்தாட்சி, மகசர் தயார் செய்யவில்லை என்றால் மண்டபம் வனசரக அலுவலகத்தில் வைத்துதான் தயார்

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2024.12.20 15:57:31 +0530

செய்யப்பட்டது. அங்கு வைத்துதான் நான் அத்தாட்சியில் கையொப்பம் செய்தேன். பொதுவாக அத்தாட்சியோ, மகசரோ தயார் செய்தார் அந்த அத்தாட்சியில் மகசரில் யாரிடமிருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டதோ அவர்களது கையொப்பமும், யார் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதோ அந்த சாட்சிகளின் கையொப்பமும், யார் கைப்பற்றினார்களோ அவரது கையொப்பமும் இடம் பெற்றியிருக்கவேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி மகசரில் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அத்தாட்சியில் சொல்லப்பட்டுள்ளதோ அவர்களது கையொப்பம் அத்தாட்சியில் இடம்பெறவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் 280 கிலோ என்பது திருத்தம் செய்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சி நான் சொன்னமாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை பின்னிட்டு வழக்கிற்கு தோதாக எங்கள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மகசரில் பச்சை கடல் அட்டை என்பது ஏற்கனவே ஏதோ எழுதி அதை அழித்துவிட்டு மீண்டும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு மறுநாள்தான் மகசர் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடல் அட்டைகள் எல்லாம் எதில் இருந்தது என்று எதையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். என்னை Assistant director of wildlife விசாரித்தாரா என்றால் விசாரித்தார்கள். இராமநாதபுரம் வனசரக அலுவலகத்தில் வைத்து 06ம் தேதி மாலை 5 மணிக்கு விசாரித்தார்கள். என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை. வழக்கிற்காக உண்மைக்குமாறாக சொல்கிறேன் என்னை அதிகாரிகள் யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தான கடல் அட்டைகள் சாதாரணமாக மீனவர் வலையில் சிக்கக்கூடியது என்றால் சரிதான். இந்த மாதிரி கடல் அட்டைகள் அனாமத்தாக மொத்தம் மொத்தமாக கிடக்ககூடிய எடுத்து புள்ளிவிபரத்திற்காக வழக்கு போடுவது வழக்கம் என்றால் வழக்கு பதியமாட்டோம். பொதுவாக அனாமத்தாக கடல் அட்டைகள் அங்கங்கே கிடக்ககூடியதை எடுத்து புள்ளிவிபரத்திற்காக வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மீனவர் வலையில் சிக்கக்கூடிய கடல் அட்டைகளை எடுத்து புள்ளிவிபரத்திற்காக எங்கள் அலுவலகத்தில் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகும்போது எவ்வளவு தூரத்தில் வைத்து பார்த்தோம் என்றால் 20 மீட்டர் தூரத்தில் இருந்து சம்பவத்தை பார்த்தோம். நாங்கள் போவதற்குள் ஒருவர் ஓடிவிட்டார். நான் சொன்னமாதிரி சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் ரோந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னதேதியில் சொன்னநேரத்தில சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எதையும் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றவில்லை மேல் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்காக புள்ளிவிபரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கிற்கு சாதமகாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேதாளை தேசிய நெடுஞ்சாலைக்கு வடக்கேயும் தெற்கேயும் கடற்கரை உள்ளது என்றால் சரிதான். வடக்கே உள்ளது வடகடற்கரை என்றும் தெற்கே உள்ளது தெற்குகடற்கரை என்றும் அழைக்கப்படும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.12.20 15:57:38 +0530